## தும்பனே பிரதேச சபை - 2022

-----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தும்பனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியில் தீர்வு செய்யப்பட்ட ரூபா 3,349,272 ஆன 16 நிர்மாண கடன் பட்டோர் மீதிகள் தொடர்ந்தும் கடன் பட்டோரில் காண்பிக்கப்பட்டிருந்தது. | விரைவில் சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 முதல் 2021 காலப்பகுதியில் செலுத்தி முடித்த ரூபா 5,806,869 கூட்டுத்தொகையான 21 கடன் கொடுத்தார் மீதிகள் தொடர்ந்தும் கடன் கொடுத்தோரில் உள்ளடக்கப்பட்டிருந்தன | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 10 கணக்கு விடயங்களுக்குரிய பயன்பாட்டு பதிவேடுகளில் காணப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 569,076 ஆன வேறுபாடு இருந்தது. | வேறுபாடுகளை பரீட்சித்து சீராக்கம் செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயானங்கள் மற்றும் சவப்பெட்டிகள் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவு | சபையால் பயன்படுத்தப் படுகின்ற அதிகார 37 மயானங்களின் உரித்து சபைக்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை. | கையளிப்பு கட்டளைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி 571(3) | 2015 – 2019 வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான ரூபா 1,538,206 பெறுமதியான 69 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நியம உப உறுப்புரை) சட்டம் | | | |
| | விளம்பர அறிவித்தல் தொடர்பான உப உறுப்புரை | 05 இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 64,250 ஆன விளம்பர பதாதைகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாகற | அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,743,785 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,820,903 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,744,000 | 3,248,188 | 3,239,550 | 1,765,855 | 2,744,000 | 3,143,434 | 3,514,884 | 1,757,217 |
| (ii) | வாடகை | 5,156,000 | 4,780,730 | 5,261,153 | 408,847 | 6,312,000 | 5,376,152 | 4,899,074 | 889,270 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,640,000 | 1,683,076 | 1,493,955 | 189,121 | 1,640,000 | 1,700,842 | 1,447,842 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 30,953,600 | 46,016,081 | 50,851,993 | 34,449,247 | 22,240,500 | 59,241,040 | 51,735,809 | 39,285,159 |
| | | 40,493,600 | 55,728,075 | 60,846,651 | 36,813,070 | 32,936,500 | 69,461,468 | 61,597,609 | 41,931,646 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 1,765,855 ஆக காணப்பட்டதுடன் அலகொன்றில் வீதவரி நிலுவை ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 16 வீதவரி ஆதனங்களில் மொத்தம் ரூபா 279,019 ஆன தொகையும் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 68 வீதவரி ஆதனங்களில் மொத்தம் ரூபா 633,426 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 872,652 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 30,014,580 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 02 நீர் செயற்திடட்டங்களை நிறைவேற்று வதற்காக ரூபா 3,890,024 செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வான்டில் இறுதித் திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிதியம் போது அளவு இல்லாமல் இருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டின் ரூபா 1,686,061 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அளகொல மடித்த நீர் முன்மொழிவு முறைமை செயல்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் நீர் பாவனையாளர்களுக்கு நீர் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த முன் மொழிவினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 93(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் இருந்து மலக் கழிவுகளை அகற்றுவதற்காக முறையாக குழிகளை குறித்த காலப்பகுதியில் சுத்திகரித்தல் மற்றும் வெறுமையாக்குவதற்கான கலி வண்டி சேவையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கழிவு பொருளை வெளியேற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) சபைக்கு உரிய மூன்று நீர் செயற்திட்டங்களில் 2022 இல் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ஈ கோலி (E Coli) பாக்டீரியா கலவை 36 மற்றும் குவாலிபாம் (Coliform) பக்றீரியா 28 – 110 இற்கு இடையேயான வீச்சில் காணப்பட்டன. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 78 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் குடிப்பதற்கு பொருத்தமற்ற நீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | நீர் மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக | நீர் மாதிரி பரீட்சிக்கப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுஜாதா மகளிர் வித்தியாலயத்திற்கு முன்னால் வியாபாரத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்து நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த ஒப்பந்தக்காரர் நிர்மாணத்தை கை விட்டு சென்றிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 883,333 தொகையை இதுவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 104(3) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 2021 திசெம்பர் 08 ஆந் திகதி காணாமல் போன ரூபா 74,250 ஆன விளையாட்டு உபகரணங்கள் இருப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) (4) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை | எதிர்காலத்தில் சீர் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 78,290,549 ஆக இருந்ததுடன் அதில் 03 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 5,840,917 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 3,647,359 ஆகும். | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 105 கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ரூபா 12,009,300 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,264,729 தொகையும் ரூபா 62,155,624 ஆகவும் இருந்தன. | பரீட்சித்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் | கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 1,358,214 ஆன 03 வாகனங்கள் மற்றும் 02 இயந்திரங்கள் 05 இற்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | திருத்தம் செய்வதற்கோ அல்லது ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தங்களை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டும் |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் நிர்மாணிக்கப்பட்ட ஹஹதரலியத்த வியாபார சந்தை தொகுதி அமைந்துள்ள காணி கையேற்பட்டு இருக்கவில்லை. | சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) | கலகெதர உப அலுவலகம் அமைந்துள்ள காணி அரம்பேகட உப அலுவலகத்திற்குரிய 06 காணித் துண்டுகள், சங்க ராஜபுர உப அலுவலகத்திற்குரிய 08 காணி துண்டுகளின் உரித்தும் 08 கட்டிடங்களின் உரித்தும் கையேற்கப்பட்டிருக்கவில்லை | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடம் ஆலோசணை கோரப்பட்டுள்ளதாக | காணிகளின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் கடன்** | | |
| 2018 – 2021 காலப்பகுதிக்குரிய இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 758,450 கூட்டுத் தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை | கடன்களைள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | கடன்கள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 21 வருமான விடயங்களில் 30 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்தும் 09 செலவின விடயங்களில் 37 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நோக்கங்கள் மற்றும் திட்டங்களை அவ்வாறே மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டுள்ளதாக | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |